செ.வெ.எண் : 05/ மே நாள் : 06.05.2021

# இராமநாதபுரம் நகரில் காய்கறி, பழங்கள், பூக்கள் விற்பனைக்காக 2 இடங்களில் தற்காலிக கடைகள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் கூட்டமாகக் கூடுவதை தவிர்த்திடும் நோக்கில் மாவட்டத்தில் பல்வேறு கட்டுப்பாடுகள் நடைமுறைபடுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சந்தைகள், காய்கறி மற்றும் பழக்கடைகளில் பொதுமக்கள் கூட்டமாக கூடுவதை தவிர்த்து சிரமமின்றி தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிச் செல்ல ஏதுவாக இராமநாதபுரம் நகரப் பகுதியில், இராமநாதபுரம் பழைய பேருந்து நிலைய வளாகம், இராஜா மேல்நிலைப்பள்ளி மைதானம் ஆகிய 2 இடங்களில் காய்கறி, பழங்கள், பூக்கள் விற்பனைக்கான தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. நகரின் பிற பகுதிகளில் காய்கறி கடைகள், பழக்கடைகள், பூக்கடைகள் செயல்பட அனுமதியில்லை. இதேபோல, மாவட்டத்தின் பிற முக்கிய நகரங்களிலும் தற்காலிக கடைகள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கடைகள் 07.05.2021 முதல் தினந்தோறும் காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை செயல்படும். பொதுமக்கள் வெளியே செல்லும் போது கூட்டமாக கூடாமல், சமூக இடைவெளி கடைபிடித்து கட்டாயம் முககவசம் அணிந்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**